# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, யூன் மாதம் 17 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 28.75** **தபாற் செலவு : ரூபா 10.00**

## 2005 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

[2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ. ஓ. 3/2005
4847

**2004 திசெம்பர் 26 ஆம் தேதியன்று ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆட்கள் மற்றும் ஆதனங்கள் தொடர்பில் விசேட சட்ட ஏற்பாடுகள் ஆக்கப்படுவதை இயலச் செய்வதற்கும் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளை வான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

2004 திசெம்பர் 26 ஆந் தேதி இடம்பெற்றதும் இலங்கையில் பெருமளவு எண்ணிக்கையினதான உயிர்களுக்கும் ஆதனங் களுக்கும் பாரிய இழப்பை விளைவித்ததுமான சுனாமியின் விளைவாக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் அளிப்பதும் அரசின் தேசியக் கொள்கையாகவிருக்கின்றது ஆதலாலும் : முன்னுரை.

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆட்கள் உளதான சட்டங்களினால் வழங்கப்பட்ட குறித்தசில உரிமைகளைப் பிரயோகிக்கவும் குறித்தசில நலன்களை அனுபவிக்கவும் இயலாதவர்களாயிருப் பதனாலும் மற்றும் அவர்களால் உளதான சட்டத் தேவைப்பாடு களுடன் இணங்கியொழுக இயலாமையின் விளைவாக அவர்கள் குறித்தசில தடங்கல்களுக்கும் பிரதிகூலங்களுக்கும் உட்படுத்தப் படுகின்றார்கள் ஆதலாலும் :

சுனாமியின் காரணமாக பெற்றோரின் கவனிப்புப் போதியளவில் கிடைக்கப்பெறாது சிறுவர்களும் இளம் ஆட்களும் விடப்பட்டிருக்கின்றார்கள் என்பதாலும் அவர்கள் மாற்றீடான கவனிப்பையும் பாதுகாப்பையும் பெறுகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்துவது அவசியமாக இருக்கின்றது ஆதலாலும் :

அத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆட்கள் தற்போதிருக் கின்ற சட்டமுறை இடையூறுகளையும் உளதான சட்டத் தடை களையும் தாண்டி வருவதனை இயலச்செய்வதற்கும் அவர்களது உரிமைகளினதும் சிறப்புரிமைகளினதும் பாதுகாப்பையும் தற்காத்தலையும் உறுதிசெய்வதற்கும் விசேட சட்ட ஏற்பாடுகளை ஆக்கவேண்டிய உடனடித் தேவைப்பாடொன்று இப்பொழுது உளதாகவிருக்கின்றதாதலாலும் :

ஆகவே, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

2 –PL 000228– 1,250 (2005/04)

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் 2005 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

### இறப்புச் சான்றிதழ்களை வழங்கல்

*2004 திசெம்பர் 26 ஆம் தேதியன்றுள்ளவாறு குறித்தசில இடப்பரப்பில் வசித்த ஆட்கள் காணாமற் போனதாக அறியப்படுமிடத்து.*

**2.** சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 108 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் 2004, திசெம்பர் 26 ஆம் தேதியன்று இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பொன்றில் வசித்துவந்த அல்லது அத்தேதியன்று அத்தகைய இடப்பரப்பில் இருந்திருப்பதாக அல்லது அதனூடாகப் பிரயாணம் செய்ததாக அறியப்பட்ட எவரேனும் ஆளை அத்தேதியிலிருந்து கண்டுபிடிக்கமுடியா திருக்குமிடத்தும் அத்துடன் அவர் உயிருடனிருந்திருப்பின் வழமையாக அத்தகைய ஆளைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கக் கூடியவர்கள் ஆறு மாதத்திற்கு அவரைப் பற்றிக் கேள்விப்படா திருக்குமிடத்தும் அன்றையதினம் ஏற்பட்ட சுனாமி அவரது மறைவுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதாகுமிடத்தும், அத்தகைய ஆள் உயிருடனிக்கின்றார் என்பதனை எண்பிக்கும் பொறுப்பு அதனை உறுதிப்படுத்தும் ஆளைச்சார்ந்ததாகும்.

*2 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவர் தொடர்பில் இறப்புச் சான்றிதழொன்றைப் பெறுவதற்கான நடவடிக்கை முறை.*

**3.** (1) இரண்டாம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனும் ஆளின் நெருங்கிய உறவினர் அல்லது நெருங்கிய உறவினர் எவரும் இல்லாதவிடத்து அத்தகைய ஆளை அறிந்திருக்கும் வேறு எவரேனும் ஆள், அத்தகைய ஆள்த் தொடர்பில் இறப்புச் சான்றிதழொன்று வழங்கப்படுவதற்கென இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் விண்ணப்பிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட விண்ணப்பமொன்று, 2004 திசெம்பர் 26 ஆம் தேதியிலிருந்து ஆறு மாதங்கள் காலாவதியான பின்னர் எந்நேரத்திலும் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் செய்யப்படலாம் என்பதுடன் அத்தகைய ஆள் எந்த இடப்பரப்பினுள் வசித்தாரோ அந்த இடப்பரப்பின் கிராம அலுவலருக்குச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும். அத்தகைய விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதன்மீது உடனடியாக, கிராம அலுவலர், அறிவித்தற்றேதியிலிருந்து இருவாரங்களினுள், விண்ணப்பிக்கப் பட்டவாறான இறப்புச் சான்றிதழொன்றின் வழங்குகைக்கான ஆட்சேபனைகள் எவையுமிருப்பின் அவற்றைக் கோருகின்ற அத்தகைய அறிவித்தலை அவரது அலுவலகத்தில் வெளிக்காட்டி வைத்தல் வேண்டும். கிராம அலுவலர் ஆட்சேபனைகளைக்

கோப்பிடுவதற்கான காலப்பகுதி முடிவுற்றதன்மீது ; அத்துடன் பொருத்தமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையின் பின்னர் அவ்விடப்பரப்பின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமிருந்து அறிக்கையொன்றைப் பெற்றுக் கொண்டு அதனைச் சான்றுறுதிசெய்து, அதன்கண் குறிப் பிடப்பட்ட நிகழ்வுகளின் செம்மை பற்றிய அவரது அறிக்கையுடன் சேர்த்து அவரது இடப்பரப்பு அமைந்துள்ள பிரிவின் பிரதேசச் செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும். பிரதேசச் செயலாளர் அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றையும் புறக்குறிப்புச்செய்து பதிவாளர் தலைமையதிபதிக்கு அதனை அனுப்புதல் வேண்டும்.

(3) பதிவாளர் தலைமையதிபதி விண்ணப்பமொன்று (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி முறையாக சான்றுறுதிசெய்து புறக்குறிப்பிடப்பட்டு கிடைக்கப்பெற்றதன்மீது, முன்வைக்கப்பட்ட ஆவணங்கள் பற்றித் திருப்திப்படுவதன்மேல், அத்தகைய விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட விவரங்களை (110 ஆம் அத்தியாயமான) பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டத்தின்கீழ் அத்தகைய பதிவாளரால் பேணப்படும் இறப்புகள் பதிவேட்டில் பதியுமாறு தோதான பதிவாளரைப் பணிக்கின்ற கட்டளையை ஆக்குதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தோதான பதிவாளர் அத்தகைய பதிவேட்டில் அத்தகைய விவரங்களை உடனடியாகப் பதிதலும் வேண்டும். அத்துடன் பதிவேட்டைத் தோதான இடத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

(4) பதிவாளர் தலைமையதிபதியால் (3) ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையுடன் இயைபான பதிவேட்டுப் பதிவின் இணைப்பிரதி இணைக்கப்பட்டு அத்தகைய இணைப்பிரதியும் கட்டளையும் பதிவாளரால் ஒன்றாகச் சேர்த்து பதிவாளர் தலைமையதிபதியின் அலுவலகத்தில் கட்டுக்காப்பிற்காக அனுப்பப்படுவதற்காகத் தோதான மாவட்டப் பதிவாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

எந்த ஆள் தொடர்பில் 3 ஆம் பிரிவின்கீழ் இறப்புச் சான்றிதழொன்று வழங்கப்பட்டதோ அந்த ஆள் உயிருடன் இருப்பதாகத் தகவல் பெறப்படுமிடத்து.

**4.** (1) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றைப் பின்பற்றி, ஏதேனும் இறப்பு பதியப் பட்டிருந்து, அதன் பின்னர் எவரேனும் ஆள் எந்த நேரத்திலும் அவ்வாறு இறந்துள்ளதாகப் பதிவுசெய்யப்பட்டவரான ஆள் உயிருடன் உள்ளார் என அறியவருமிடத்து உடனடியாக அத்த கைய தகவலை அத்தகைய ஆள் பதிவாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) பதிவாளர் தலைமையதிபதியானவர் அத்தகைய தகவலைப் பெற்றுக்கொண்டதன்மேல், இயைபான பொலிசு நிலையத்தின் பொறுப்பான அலுவலருக்குத் தகவலைத் தெரியச்

செய்தல் வேண்டும். அவர் அத்தகைய தகவலின் உண்மை பற்றி விசாரித்து, எந்தத் திகதியன்று அத்தகைய அலுவலருக்கு அத்த கைய தகவல் தெரியச்செய்யப்பட்டதோ அந்தத் திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள்ளாகப் பதிவாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடுதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக் கொண்டதன்மேலும் மற்றும் அவர் அவசியமெனக் கருதுகின்றவா றான அத்தகைய விசாரணையின் பின்னரும், பதிவாளர் தலை மையதிபதி, எந்த ஆளுடைய இறப்புப் பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அந்த ஆள் உயிருடன் இருக்கின்றார் என்பதுபற்றித் திருப்திப் பட்டால், (110 ஆம் அத்தியாயமான) பிறப்புக்கள் இறப்புக்கள் பதிவுச்சட்டத்தின் 52 ஆம் பிரிவின்கீழ் பதிவுகளைத் திருத்து வதற்கு, விடயத்தில் சூழ்நிலைகளில் தோதாகக்கூடியவாறான அத்தகை நடவடிக்கையை எடுத்தல் வேண்டும் அல்லது அத்தகைய கட்டளையை ஆக்குதல் வேண்டும் அல்லது அத்தகைய பணிப் பைக் கொடுத்தல் வேண்டும்.

(4) பதிவாளர் தலைமையதிபதியால் (3) ஆம் உட்பிரிவின்கீழ் நடாத்தப்படும் விசாரணை எதுவும் அது தொடங்கப்பட்ட திலிருந்து ஒரு மாதத்திற்குள்ளாக முடிக்கப்படுதல் வேண்டுமென் பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதியானவர் அத்தகைய விசாரணையொன்றின் நோக்கங்களுக்காக அந்தச் சட்டத்தின்கீழ் அவரால் நடாத்தப்படும் விசாரணையொன்று தொடர்பில் (110 ஆம் அத்தியாயமான) பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் அவரால் பிரயோகிக்கப்படற்பாலனவான எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தலும் வேண்டும்.

தவறுகள்.

**5.** எந்த ஆள் -

(அ) மூன்றாம் பிரிவின்கீழ் அவரால் செய்யப்பட்ட விண்ணப்ப மொன்றில், அறிந்துகொண்டே பொய்யான கூற்றொன்றைச் செய்கின்றாரோ அல்லது பொய்யான தகவலைக் கொடுத்துதவு கின்றாரோ ;

(ஆ) எந்த ஆளின் இறப்பு 3 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பத்தைப் பின்பற்றிப் பதிவுசெய்யப்பட்டதோ அந்த ஆள் உயிருடன் உள்ளார் என்பதைத் தெரிந்துள்ளவராக இருந்து கொண்டு பதிவாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய தகவலைக் கொடுத்துதவத் தவறுகின்றாரோ ; அல்லது

(இ) அத்தகைய சான்றிதழில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆள் உயிருடன் உள்ளார் எனத் தெரிந்துகொண்டு அல்லது அவ்வாறு நம்புவதற்கான காரணத்தைக் கொண்டிருந்தும், பிறப்புகள், இறப்புகள் பதிவுச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழொன்றை நேர்மையற்றவிதமாக அல்லது மோசடியாகப் பயன்படுத்துகின்றாரோ,

அந்த ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் மேல்நீதிமன்றத்தினாலான விளக்கத்தின்பின் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் மூன்றாண்டுகளுக்குக் குறையாததும் ஐந்தாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலத்திற்கு மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கப்படுதலும் வேண்டும்.

பொருள்கோடல்.

**6**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி -

"தோதான மாவட்டப் பதிவாளர்", "தோதான பதிவாளர்" அத்துடன் "மாவட்டம்" என்பன (110 ஆம் அத்தியாயமான) பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச்சட்டத்தினால் அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"மாவட்டப் பதிவாளர்" என்பது, (110 ஆம் அத்தியாயமான) பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பிறப்புக்கள் இறப்புக்கள் மாவட்டப் பதிவாளர் ஒருவர் எனப் பொருள்படும் ;

"பதிவாளர் தலைமையதிபதி" என்பது (110 ஆம் அத்தியாயமான) பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச் சட்டத்தின் 2ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவாளர் தலைமையதிபதி என்று பொருள்படும் என்பதுடன், அது பிரதிப் பதிவாளர் தலைமையதிபதியையும் உள்ளடக்கும்.

## பாகம் II

### பிள்ளைகளினதும் இளம் ஆட்களினதும் கட்டுக்காவல்

சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமை.

**7**. இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள் பின்வருவோர் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும் :—

2004, திசெம்பர் 26 ஆம் திகதி இடம்பெற்ற சுனாமியின் விளைவொன்றாக—

(அ) அநாதையாக விடப்பட்ட பிள்ளை மற்றும் இளம் ஆள் ஒவ்வொருவரும் ;

(ஆ) அத்தகைய பிள்ளையின் கவனிப்பை ஏற்கமுடியா திருக்கும் தனியொரு பெற்றோருடன் விடப்பட்டுள்ள பிள்ளை ஒவ்வொன்றும் ;

(இ) தனியொரு பெற்றோருடன் விடப்பட்டுள்ளவரும் அத்த கைய பெற்றோரால் வழங்க முடியாதிருக்கும் கவனிப் பும் பாதுகாப்பும் தேவைப்படும் இளம் ஆள் ஒவ்வொரு வரும்.

அதிகாரசபை இடாப்பு ஒன்றைப் பேணுதல்.

**8.** (1) 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அநாதையாக விடப்பட்ட பிள்ளை ஒவ்வொன்று தொடர்பிலும் அத்துடன் எந்தப்பிள்ளை அல்லது இளம் ஆள் தொடர்பில் இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின்கீழ் சுவீகாரம் கவனிப்பு விரும்பப்படுகின்றதோ அந்தப் பிள்ளை மற்றும் இளம் ஆள் ஒவ்வொருவர் தொடர்பிலும் கிடைக்கப்பெற்றுள்ள எல்லாத் தகவலும் அடங்கிய இடாப் பொன்றைப் பேணுதல் வேண்டும்.

(2) அதிகாரசபை (1) ஆம் உட்பிரிவின்கீழ் பேணப்படும் இடாப்பு செம்மையான தகவலைக் கொண்டிருப்பதனை உறுதிசெய்யும் நோக்கத்துக்காக எந்தப் பிள்ளைகளையும் இளம் ஆட்களையும் பற்றிய தகவல் அத்தகைய இடாப்பில் பதியப்படுகின்றதோ அந்தப் பிள்ளைகளையும் இளம் ஆட்களையும் பற்றி அவசியமானதென அது கருதக்கூடியவாறான ஏதேனும் விசாரணையைச் செய்யுமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

நிகழ்காலக் கட்டுக்காப் பாளராகப் பதிவுசெய்தல்.

**9.** (1) இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்குவரும் தேதியன்று இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறாக பிள்ளையொன்றைக் கட்டுக்காப்பில் வைத்துள்ள ஒவ்வோராளும் அத்தகைய ஆள் :-

(அ) பிள்ளையின் பெற்றோராக இருந்தாலன்றி அல் லது ;

(ஆ) 2004, திசெம்பர் 26 ஆம் திகதியின்பின்னர் ஏதேனும் சட்டத்தின்கீழ் பிள்ளையின் கட்டுக்காப்பு அளிக்கப் பெற்றிருந்தாலன்றி அல்லது பிள்ளையின் கவனிப்பு ஒப்படைக்கப்பெற்றிருந்தாலன்றி,

உடனடியாக, எந்த விடயத்திலும் இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வந்த தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பிந்தாமல் அத்தகைய பிள்ளையின் நிகழ்கால கட்டுக்காப்பாளராகப் பதிவுசெய்யப்படும் நோக்கத்திற்காக இச்சட்டத்திற்கான மூன்றாம் அட்டவணையில் குறித்துரைக்கப் பட்ட படிவத்தில் நன்னடத்தைச் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளருக்கு (இதனகத் துப்பின்னர் "ஆணையாளர்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவார்) விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும். ஆணையாளர் அவசியமானவிடத்து, விண்ணப்பமொன்றை ஏற்று அதனை ஆணையாளருக்கு அளிப்பதற்கான தத்துவத்தை அத்தகைய பிள்ளை தற்போது வதிகின்ற இடப்பரப்பின் பிரதேச செயலாள ருக்குக் கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பிள்ளையொன் றைக் கட்டுக்காப்பில் வைத்திருப்பவரும், நியாயமான காரண மின்றி அவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அப்பிள்ளையைப் பதிவுசெய்யத் தவறுகின்றவருமான ஒவ்வோராளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கு இருவகையி லொருவகை மறியற் தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு பதிவு செய்யத் தவறுகின்ற ஆளொருவரின் கட்டுக்காப்பில் காணப்படும் பிள்ளையொன்று, பிள்ளையின் அதிசிறந்த நலனுக்காக வழங்கப்படும் நீதிவானொருவரின் கட்டளையின்மீது, அத்தகைய ஆளின் கட்டுக்காப்பிலிருந்து ஆணையாளரால் உடனடியாக அப்புறப்படுத்தப்படுதல் வேண் டும்.

(4) ஆணையாளர் இப்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட எல்லா நிகழ்கால கட்டுக்காப்பாளர் ஒவ்வொருவரினதும் கிடைத்தி ருக்கும் எல்லாத் தகவலும் அடங்கிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டுமென்பதுடன் அதிகாரசபைக்கு தகவலின் பிரதி யொன்றை அனுப்புதலும் வேண்டும்.

(5) சுனாமியால் பாதிக்கப்பட்ட எவரேனும் பிள்ளைகள் ஏதே னும் நிறுவனத்தால் அல்லது ஒழுங்கமைப்பினால் கவனிக்கப்படு மிடத்து அத்தகைய ஒவ்வொரு நிறுவனம் அல்லது ஒழுங்கமைப்பு

தொடர்பிலும் இப்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*நிகழ்கால கட்டுக் காப்பாளரின் கடமை.*

**10.** (1) தமது கவனிப்பின் கீழுள்ள பிள்ளையொன்றுக்கு அத்தகைய பிள்ளை தமது நிகழ்காலக் கட்டுக்காப்பில் இருக்கும் வரை போதியளவு கல்வி உட்பட அத்தகைய எல்லாக் கவனிப்பையும் பாதுகாப்பையும் வழங்குவது நிகழ்காலக் கட்டுக்காப்பாளர் ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும்.

(2) தனியாளொருவராகவுள்ள நிகழ்காலக் கட்டுக்காப்பாளர் ஒருவர் தமது கவனிப்பின் கீழுள்ள பிள்ளைக்குச் சுவீகாரப் பெற்றோராக இருக்க விரும்புமிடத்து, அத்தகைய பிள்ளையின் நிகழ்காலக் கட்டுக்காப்பாளராகப் பதிவுசெய்யப்பட்ட ஒரு மாதத்திற்குள், அதற்கான விண்ணப்பமொன்று இச்சட்டத்தின் 13 ஆம்பிரிவின் கீழ் செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றது.

*சுவீகாரக் கவனிப்பிற்கான விருப்பத்தை அதிகார சபைக்கு அறிவித்தல் வேண்டும்.*

**11.** (1) ஏழாம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்படும் ஒரு பிள்ளையைச் சுவீகாரக் கவனிப்பின்கீழ் வைத்திருக்க விரும்பும் அத்தகைய பிள்ளையின் பெற்றோர் இச்சட்டம் நடைமுறைக்கு வந்த ஆறு மாதங்களுக்குள் அந்நிகழ்வுபற்றி அதிகார சபைக்கு அறிவிப்பது அவரது கடமையாதல் வேண்டும்.

(2) ஏழாம் பிரிவின் (அ) அல்லது (இ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்படும் இளம் ஆள் ஒருவர் தாம் சுவீகாரக் கவனிப்பின்கீழ் வைத்திருக்கப்படவேண்டுமென விரும்பினால் அந்நிகழ்வு பற்றி இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து ஆறு மாதங்களுக்குள் அதிகாரசபைக்கு அறிவிக்கலாம்.

*அதிகாரசபை பாதுகாவலரா யிருத்தல்.*

**12.** (1) பெற்றோர் ஒருவரால் சுவீகார கவனிப்பின் கீழ் விடப்பட்டுள்ள ஒவ்வொரு பிள்ளையும் அத்துடன் அநாதையாக விடப்பட்ட ஒவ்வொரு பிள்ளையும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று எவரேனும் ஆளின் கட்டுக்காப்பில் இருப்பினுஞ்சரி இல்லாவிடினுஞ்சரி அதிகாரசபையானது, நீதிமன்றத்தின் உயர் பாதுகாப்பாண்மைக்கமைய, அத்தகைய பிள்ளை ஒவ்வொன்றினதும் பாதுகாவலராதல் வேண்டும்.

(2) சுவீகாரக் கவனிப்பின்கீழ் அல்லாத அல்லது எத்தன்மையானதுமான ஏதேனும் காரணத்திற்காகச் சுவீகாரக் கவனிப்பில் இல்லாதொழிந்த பிள்ளை ஒவ்வொன்றுக்கும் கல்வி மற்றும்

அப்பிள்ளைக்கு ஏற்பட்ட உள அதிர்ச்சி காரணமாகத் தேவைப்படக் கூடிய ஏதேனும் விசேட பராமரிப்பு உட்படப் போதியளவு கவனிப்பும் கட்டுக்காப்பும் பாதுகாப்பும் பெறுவதை உறுதிப்படுத்துவது அதிகாரசபையின் கடமையாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பிள்ளைக்குப் பொருத்தமான சுவீகாரப் பெற்றோர் ஒருவரைத் தேடிக் கொடுக்க அதிகாரசபை அனைத்து முயற்சிகளையும் மேற் கொள்ளுதலும் வேண்டும்.

*சுவீகாரப் பெற்றோராக இருப்பதற்கான விண்ணப்பம்.*

**13.** (1) பிள்ளையொன்றின் நிகழ்காலக் கட்டுக்காப்பாளரான தனியாள் ஒருவர் உட்பட இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பிள்ளையொன்றின் அல்லது இளம் ஆள் ஒருவரின் ஒரு சுவீகாரப் பெற்றோராக வரவிரும்பும் ஆளெவரும் சுவீகாரக் கவனிப்புக் கட்டளையொன்றை வழங்கப்பெறுவதற்கு இச்சட்டத்திற்கான நாலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான படிவத்தில் அத்தகைய ஆள் எந்த நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குள் வதிகின்றாரோ அந்த நீதிவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும். விண்ணப்பத்தின் பிரதியொன்று ஐந்தாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தகவலுடன் சேர்த்து அதிகாரசபைக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) நீதிவான் நீதிமன்றம் இச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின்கீழ் அதிகாரசபையால் அனுப்பப்பட்ட குழாமின் விதப்புரையை அது கிடைக்கப்பெறும்வரை (1) ஆம் உட்பிரிவின்கீழ் பெறப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தின்மீது கட்டளையொன்றை ஆக்குதலாகாது.

*அதிகாரசபை விண்ணப்பத்தைச் சுவீகாரக் கவனிப்பு மதிப்பீட்டுக் குழாம் ஒன்றிற்கு ஆற்றுப்படுத்துதல்.*

**14.** (1) அதிகாரசபையின் தவிசாளர், 13 ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பத்தின் பிரதியொன்று கிடைக்கப்பெற்றதன்மேல் சுவீகாரப் பெற்றோர் ஒருவராக இருப்பதற்கு விண்ணப்பதாரரின் தகுதியை மதிப்பீடு செய்யும் நோக்கத்திற்கென சுவீகாரக் கவனிப்புக் கட்டளையொன்றுக்கு விண்ணப்பம் செய்த அத்தகைய ஆள் வதியும் மாகாணத்திற்கென அமைத்துருவாக்கப்பட்ட சுவீகாரக் கவனிப்பு மதிப்பீட்டுக்குழாமுக்கு (இச்சட்டத்தில் "குழாம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அதனை உடனடியாக ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட குழாம் பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :–

(அ) அதிகாரசபையின் தவிசாளர் அல்லது அவரின் நியமத்தர் ஒருவர் ;

(ஆ) இலங்கை சிறுவர் மருத்துவக் கல்லூரியின் நியமத்தர் ஒருவர் ;

(இ) தோதான மாகாணத்தின் நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளர் அல்லது அவரின் நியமத்தர் ;

(ஈ) அதிகாரசபையால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உளவியலாளர் ஒருவர் ;

(உ) அதிகாரசபையால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மனநோய் மருத்துவர் ஒருவர் ;

(ஊ) மாகாணக் கல்விப் பணிப்பாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(எ) தோதான மாகாணத்தின் சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் அல்லது அவரின் நியமத்தர்.

(3) குழாம் இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் அதற்குப் பொறுப்பிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நீண்டகாலத்திற்கு செயற்படுதல் வேண்டும்.

(4) குழாமின் உறுப்பினர்கள் தங்களிடையேயிருந்து அதன் தவிசாளராக இருப்பதற்கென உறுப்பினர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும் என்பதுடன், அதன் கூட்டங்களை நடத்துகையில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறைகளைத் தீர்மானித்தலும் வேண்டும். குழாமின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(5) சுவீகாரப் பெற்றோராக இருப்பதற்கு விண்ணப்பதாரர் ஒருவரின் தகுதியை மதிப்பீடு செய்கையில் பிள்ளையின் அதிசிறந்த நலனே முக்கியமான கருத்தாயிருத்தல் வேண்டும் என்பதுடன், அந்நோக்கத்திற்காகக் குழாம் இச்சட்டத்திற்கான ஆறாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட மூலப் பிரமாணத்தினால் வழிநடத்தப்படுதல் வேண்டும். குழாமானது, இச்சட்டத்

*துக்கான ஏழாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பதவி யொன்றை வகிக்கின்ற ஆளொருவரிடமிருந்து மனை நிலைமை பற்றிய அறிக்கையொன்றையும் பெறுதல் வேண்டும்.*

*இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காக, "மனை நிலைமை பற்றிய அறிக்கை" என்பது, விண்ணப்பகாரர்களின் உளச் சுகாதாரத்தின் மீது சமூக, மத மற்றும் நிதிசார் பின்னணியின்மீதும் ஒரு சுவீகாரப் பெற்றோராகவிருப்பதற்கு அவர்களின் தகுதியின்மீதுமான அறிக்கை என்று பொருளாகும்.*

*குழாம் அதன் விதப்புரைகளை அனுப்புதல்.*

***15.*** *(1) குழாம் விண்ணப்பமொன்றை அது மதிப்பீடு செய்த தன் பின்னர் அதன்மீதான அதன் விதப்புரையை அதிகார சபையிடமிருந்து விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் அதிகாரசபையின் தவிசாளருக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன், அதிகாரசபையின் தவிசாளர் அதனை இச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் விடயத்திற்கேற்ப, பிள்ளை அல்லது இளம் ஆள் தொடர்பிலான விண்ணப்பம் எந்த நீதிவான் நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்டதோ அந்த நீதிவான் நீதிமன் றத்திற்கு உடனடியாக அனுப்புதலும் வேண்டும்.*

*(2) அதிகாரசபை (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதப்புரைகளை அனுப்பும்போது, சுவீகாரக் கவனிப்புக் கட்டளை விண்ணப்ப தாரருக்குச் சாதகமாக ஆக்கப்படும் பட்சத்தில், கண்காணிப்பு அலுவலராக இச்சட்டத்தின் 18ஆம் பிரிவில் குறித்துரைக்கப் பட்ட பணிகளைப் புரியுமாறு தேவைப்படுத்தப்படவேண்டிய ஆளின் பதவிப் பெயரையும், பெயரையும் இனங்காணுதல் வேண்டும். அதிகாரசபையால் கண்காணிப்பு அலுவலராக இனங்காணப்படவேண்டிய ஆள் இச்சட்டத்திற்கான ஏழாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய பதவிப் பெயர்களைக் கொண்டிருக்கும் ஆட்களிடையேயிருந்து தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.*

*சுவீகாரக் கவனிப்புக் கட்டளை.*

***16.*** *(1) அதிகாரசபையின் தவிசாளரால் அனுப்பப்பட்ட குழாமின் விதப்புரைகள் கிடைக்கப்பெற்றதன்மீதும் அத்துடன் சுவீகாரப் பெற்றோர் ஒருவராக இருப்பதற்கு விண்ணப்பதாரரின் தகுதியை குழாம் விதப்புரை செய்யுமிடத்தும், நீதிவான் நீதிமன்றம், விடயத்திற்கேற்ப, அத்தகைய பிள்ளை பத்து வயதுக்கு மேற்பட்டதாயிருக்குமிடத்து பிள்ளையின் அல்லது இளம் ஆளின் சம்மதத்துடன் விடயத்திற்கேற்ப சம்பந்தப்பட்ட பிள்ளையின் அல்லது இளம் ஆளின் சுவீகாரப் பெற்றோராக அல்லது சுவீகாரப் பெற்றோர்களாக (இதனகத்துப்பின்னர் "சுவீகாரப் பெற்றோர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்) விண்ணப்பத்தில்*

பெயர் குறிப்பிடப்பட்ட ஆளை அல்லது ஆட்களை நியமிக்கும் சுவீகாரக் கவனிப்புக் கட்டளையொன்றை வழங்கலாம். வழங்கப்படும் சுவீகாரக் கவனிப்புக் கட்டளை இச்சட்டத்திற்கான எட்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய படிவத்தில் இருத்தலும் அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைவதாதலும் வேண்டும்.

(2) சுவீகாரக் கவனிப்புக் கட்டளையை வழங்குகையில் நீதிமன்றம் 15 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகார சபையால் இனங்காணப்பட்ட ஆளைக் கண்காணிப்பு அலுவலராக நியமித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அலுவலர், எந்தப் பிள்ளை அல்லது இளம் ஆள் தொடர்பில் சுவீகாரப் பராமரிப்புக் கட்டளை ஆக்கப்படுகின்றதோ அந்தப் பிள்ளை அல்லது இளம் ஆள் தொடர்பில் இச்சட்டத்தின் 18 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பணிகளைப் புரியுமாறு தேவைப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் சுவீகாரக் கவனிப்புக் கட்டளையொன்று —

(அ) பிள்ளையொன்றின் விடயத்தில், அது வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஓராண்டு காலப் பகுதிக்கு, அத்தகைய காலப்பகுதி முடிவுறுவதற்கு முன்னர் பிள்ளை பதினெட்டு வயதையடைந்தாலுஞ்சரி, செல்லுபடியாதல் வேண்டும் ; அல்லது

(ஆ) இளம் ஆள் ஒருவரின் விடயத்தில், அத்தகைய இளம் ஆள் இருபத்தொரு வயதை அல்லது சுவீகார கவனிப்புக் கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வயதை அடையும்வரை செல்லுபடியாதல் வேண்டும்.

(4) பிள்ளையொன்று தொடர்பில் வழங்கப்பட்ட சுவீகாரக் கவனிப்புக் கட்டளையொன்று ஓராண்டுக் காலம் முடியுமுன்னர் அத்தகைய கட்டளையை ஆக்கிய நீதிவான் நீதிமன்றத்திற்கு அதன் சார்பில் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது 20 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பிள்ளை இருபத்தொரு வயதை அடையும் வரை ஒரு நேரத்தில் மேலும் ஓராண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் புதுப்பிக்கப்படலாம்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் சுவீகாரம் கவனிப்புக் கட்டளையொன்று வழங்கப்பட்டமை எவ்வாறிருப்பினும் சுவீகாரப் பிள்ளையொன்று பதினெட்டு வயதை அடையும் வரை அதிகாரசபை எல்லா நேரங்களிலும் அத்தகைய பிள்ளையின் பாதுகாவலராகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

*சுவீகாரப் பெற்றோர் ஒருவரின் கடமை.*

**17.** சுவீகாரப் பிள்ளை அல்லது இளம் ஆள் தொடர்பில் போதியளவு கல்வியும் அத்தகைய பிள்ளைக்கு அல்லது இளம் ஆளுக்கு ஏற்பட்ட மன அதிர்ச்சியின் காரணமாகத் தேவைப்படக் கூடிய ஏதேனும் விசேட கவனிப்பும் உட்பட அத்தகைய பிள்ளையின் அல்லது இளம் ஆளின் இயற்கைப் பெற்றோரைப் போன்று எல்லாப் பராமரிப்பையும் பாதுகாப்பையும் வழங்குவதும் அத்தகைய எல்லாக் கட்டுப்பாட்டையும் பிரயோகித்தலும் வேறு எல்லாக் கடப்பாடுகளையும் நிறைவேற்றுதலும் அத்தகைய சுவீகாரப் பெற்றோர் ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும்.

*எந்தப் பிள்ளை தொடர்பில் சுவீகாரக் கவனிப்புக் கட்டளை ஆக்கப்படுகின்றதோ அந்தப் பிள்ளை தொடர்பில் கண்காணிப்பு அலுவலரின் கடமை.*

**18.** (1) இச்சட்டத்தின்கீழ் 16 ஆம் பிரிவின்கீழ் சுவீகாரக் கவனிப்புக் கட்டளை ஆக்கப்படுமிடத்து, சுவீகாரப் பெற்றோர் மீது சுமத்தப்பட்ட கடமைகளும் கடப்பாடுகளும் நிறைவேற்றப்படுவதனையும் புரியப்படுவதனையும் கண்காணித்தலும் அத்துடன் இச்சட்டத்திற்கான ஒன்பதாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு முறை அதிகாரசபைக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தலும் அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்ட ஆளின் கடமையாதல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் தவிசாளர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபைக்கு அனுப்பப்பட்ட அறிக்கையின் பிரதியொன்றைக் குழாமிற்கு அதன் மதிப்பீட்டிற்கும் பரிசீலனைக்குமெனச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், குழாம் மதிப்பீட்டறிக்கையின் மீதான அதன் குறிப்புரைகளை அது கிடைக்கப்பெற்றதிலிருந்து ஒருவார காலத்திற்குள் அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுதலும் வேண்டும்.

*கண்காணிப்பு அலுவலர் எவையேனும் வளவுகள் முதலியவற்றினுட்பிரவேசிப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல்.*

**19.** (1) கண்காணிப்பு அலுவலர் ஒருவர் 18 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரது கடமைகளை நிறைவேற்றுகையில் விடயத்திற்கேற்ப பிள்ளை அல்லது இளம் ஆள் அப்போதைக்கு வதியும் வளவுகளினுள் ஏதேனும் நேரத்தில் பிரவேசித்து பரிசோதனை செய்வதற்கும் அவர் அவசியமானதெனக் கருதக்கூடியவாறான எவரேனும் ஆளை அல்லது ஆட்களை விசாரிப்பதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) கண்காணிப்பு அலுவலர் ஒருவர் அவரது கடமைகளை நிறைவேற்றுகையில் அவரைத் தடைசெய்கின்ற ஆளெவரும் இச் சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் கண்காணிப்பு அலுவலர் ஒருவரைத் தடை செய்தமைக்குக் குற்றவாளியாகக் காணப்பட்ட ஆள், பிள்ளையின் அல்லது இளம் ஆளின் சுவீகாரப் பெற்றோராக இருக்குமிடத்து அவ்வுட்பிரிவால் விதிக்கப்பட்ட தண்டனைக்கு மேலதிகமாக அத்தகைய சுவீகாரப் பெற்றோர் தொடர்பில் வழங்கப்பட்ட சுவீகாரக் கவனிப்புக் கட்டளை இல்லாதொழிக்கும் தத்துவத்தையும் நீதிவான் கொண்டிருத்தல் வேண்டும்.

சுவீகாரக் கவனிப்புக் கட்டளையை இல்லாது ஒழித்தல்.

**20.** (1) குழாமின் குறிப்புரைகள் கிடைக்கப்பெற்றதன்மீது, வழங்கப்பட்ட கவனிப்பும் பாதுகாப்பும் அத்துடன் சுவீகாரப் பெற்றோர்மீது சுமத்தப்பட்ட கட்டுப்பாட்டின் பிரயோகமும் கடமைகள் மற்றும் கடப்பாடுகளின் நிறைவேற்றுகையும் சம்பந்தப்பட்ட பிள்ளையின் அல்லது இளம் ஆட்களின் சிறந்த நலனுக்கு நிறைவேற்றப்பட வில்லை என அதிகாரசபை அபிப்பிராயப்படுமிடத்து சுவீகாரக் கவனிப்புக் கட்டளையை ஒழிப்பதற்கு அதிகாரசபையால் செய் யப்பட்ட விண்ணப்பத்தின்மீது நீதிமன்றம் அக்கட்டளையை இல்லாதொழிக்கலாம் என்பதுடன் சம்பந்தப்பட்ட பிள்ளையை அல்லது இளம் ஆளை சுவீகாரப் பெற்றோரின் கட்டுக்காப்பிலிருந்து அப்புறப்படுத்தி நீதிமன்றத்தால் குறித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய மாற்றுக் கவனிப்பை ஏற்பாடு செய்யுமாறும் இயைபான கண்காணிப்பு அலுவலரைப் பணிக்கலாம். ஒரு சுவீகாரக் கவனிப்புக் கட்டளையின் இல்லா தொழிப்பு இச்சட்டத்திற்கான பத்தாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(2) சுவீகாரக் கவனிப்புக் கட்டளையொன்று இல்லாதொழிக்கப்பட்டவிடத்து, அதனை இல்லாதொழித்த நீதிவான் நீதிமன்றம் வேறு எவரேனும் ஆளிடமிருந்து சுவீகாரப் பராமரிப்புக்கான விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மீது புதிய சுவீகாரக் கவனிப்புக் கட்டளையொன்றை வழங்கலாம் என்பதுடன் 13 முதல் 19 வரையிலான பிரிவுகள் அவ்விண்ணப்பம் தொடர்பில் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

*பிள்ளை சுவீகாரக் கவனிப்பின் கீழிருந்தாலன்றி சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் மகவேற்பு எதுவுமில்லை.*

**21.** பிள்ளையொன்று இச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சுவீகாரக் கவனிப்புக் கட்டளையொன்றின்கீழ் முதலில் சுவீகாரக் கவனிப்பின்கீழ் வைக்கப்பட்டிருந்தாலன்றியும் வைக்கப்படும் வரையிலும் நீதிமன்றமெதுவும், (61 ஆம் அத்தியாயமான) சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பந்தி (அ), பந்தி (ஆ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட பிள்ளையொன்றின் மகவேற்பிற்கான விண்ணப்பமொன்றைக் கருத்திற்கொள்ளுதலாகாது.

*சுவீகாரக் கவனிப்பின் கீழ் மகவேற்புக்கான விண்ணப்பம்.*

**22.** (1) சுவீகாரப் பெற்றோர் ஒருவர் உட்பட ஆளெவரும் அத்தகைய ஆள் பிள்ளையொன்றை மகவேற்புச் செய்ய விரும்புமிடத்து மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ், அத்தகைய பிள்ளை எந்த மாவட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துள் அப்போதைக்கு வதிகின்றதோ அந்த மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம் என்பதுடன், நீதிமன்றம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய மகவேற்புக்கு அதிகாரமளிக்கும் கட்டளையொன்றையும் ஆக்கலாம். சுவீகாரக் கவனிப்புக் கட்டளை ஆக்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதி முடிவடையும் வரை மகவேற்புக் கட்டளையெதுவும் பயனுறுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் மகவேற்பிற்கான விண்ணப்பமொன்று பிள்ளை சுவீகாரப் பராமரிப்பின்கீழ் வைக்கப்பட்டிருந்தாலன்றி ஒன்பது மாத காலப்பகுதியொன்று முடிவடைந்ததன் பின்னர் ஏதேனும் நேரத்தில் ஆக்கப்படலாம்.

(3) ஏதேனும் பிள்ளை தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் இருக்குமிடத்து நீதிமன்றம் பிள்ளையின் சிறந்த நலனை கருத்திற்கொண்டு அது பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

(4) மகவேற்பிற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று மாவட்ட நீதிமன்றத்தால் அளிக்கப்படுமிடத்து, அப்பிள்ளை தொடர்பில் ஆக்கப்பட்ட சுவீகாரக் கவனிப்புக் கட்டளையை புதுப்பிக்கும் கட்டளையொன்று உடனடியாக அற்றுப்போனதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம், 4 ஆம் பிரிவுகள் ஏற்புடைத்தாதல்*

**23.** (1) சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் , 4 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் மகவேற்பொன்று தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும். ஆயினும், பத்து வயதுக்குக் குறைந்த பிள்ளையொன்று தொடர்பில் அதிகாரசபையின் சம்மதமின்றி மகவேற்புக் கட்டளை எதுவும் ஆக்கப்படுதலாகாது.

(2) சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தன்னைத் திருப்திப்படுத்துகையில் நீதிமன்றமானது, மகவேற்பு விண்ணப்பம் சம்பந்தப்பட்ட பிள்ளையின் சுவீகாரப் பெற்றோரால் செய்யப்படுமிடத்து, சுவீகாரக் கவனிப்புக் காலப்பகுதியொன்றின் போது அத்தகைய பிள்ளை தொடர்பில் கண்காணிப்பு அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

*பிறப்புச் சான்றிதழ் வழங்கல்.*

**24.** (1) எந்தப் பிள்ளை தொடர்பில் 22 ஆம் பிரிவின்கீழ் மகவேற்புக் கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்தப் பிள்ளை பிறப்புச் சான்றிதழொன்றை உடைமையில் வைத்திராதவிடத்து நீதிமன்றமானது, ஆக்கப்பட்ட கட்டளையில் அத்தகைய பிள்ளையின் பிறந்த திகதி அறியப்பட்டவிடத்து, அத்தயை பிறந்த தேதியைக் குறித்துரைத்தல் வேண்டும் அல்லது தேதி அறியப் படாதவிடத்து, நீதிமன்றம் அத்தகைய பிள்ளையின் உத்தேசப் பிறந்த தேதியாக மருத்துவத் தொழிலர் ஒருவரால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றில் குறிப்பிடப்பட்டவாறான அத்தகைய சாத்தியமான தேதியை அத்தகைய பிள்ளையின் பிறந்த தேதியாகக் குறித்துரைத்தல் வேண்டும்.

(2) நீதிமன்றம் மகவேற்பு விண்ணப்பமொன்றின்மீதான அதன் கட்டளையை ஆக்கியதும், சம்பந்தப்பட்ட பிள்ளை பிறப்புச் சான்றிதழொன்றை உடைமையில் வைத்திராதவிடத்து அப்பிள்ளைக்கு உடனடியாகப் பிறப்புச் சான்றிதழொன்றை வழங்குமாறு பிறப்புகள், இறப்புக்கள் பதிவாளரைப் பணித்தலும் வேண்டும்.

*சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல்.*

**25.** இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட மகவேற்புக் கட்டளையொன்று, சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டத்தில் அடங்கியுள்ளதற்கு முரணாக உள்ளது எது எவ்வாறிருப்பினும், எல்லா நோக்கங்களுக்காகவும் அக்கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட மகவேற்புக் கட்டளையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அக்கட்டளைக்கும் அது தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

**26.** அதிகாரசபையானது, 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் அத்தகைய அதிகாரசபைக்குக் குறித்தொதுக்கப்பட்ட கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்குமான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். *1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம் எவ்வாறிருப்பினும் அதிகாரசபை செயற்படுதல்.*

**27.** சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப்படுத்தினாலன்றி இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்கு— *பொருள் கோடல்.*

"பிள்ளை" என்பது, பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆளொருவர் என்று பொருள்படும்

"மருத்துவத் தொழிலர்" என்பது, (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவத் தொழிலர் ஒருவர் என்று பொருள்படும்

"இளம் ஆள்" என்பது, பதினெட்டு வயதை எய்திவரும் ஆனால் இருபத்தொரு வயதுக்குக் கீழ்ப்பட்டவருமான ஆளொருவர் என்று பொருள்படும்.

## பாகம் III

### கால விதிப்பனவு

**28.** (1) சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆளொருவரால் 2004, திசெம்பர் 26 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கியிருந்த அசைவற்ற ஆதனத்தின் பாதகமான உடைமையானது, அவ்வாள் சுனாமியின் விளைவொன்றாக அவரது உடைமையில் தொடர்ந்திருப்பதினின்று தடைசெய்யப்பட்டாராயின் 2004, திசெம்பர் 26 தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதியொன்றுக்கு இடையறுதலுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகக் கருதப்படுதலாகாது. *பாதகமான உடைமை இடையறுக் கப்பட்டதாக கருதப்படாமை.*

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவரால் அசைவற்ற ஆதனத்தின் உடைமை கொள்ளலானது அத்தகைய ஆதனம் 2004, திசெம்பர் 26 முதல் 2005, திசெம்பர் 26 வரையிலான காலப்பகுதியின்போது வேறு எவரேனும் ஆளின் அல்லது ஆட் களின் உடைமையில் இருந்தது என்ற நிகழ்வு காரணமாக மாத்திரம் இடையறுதலுக்குட்படுத்தப்பட்டதாகக் கருதப்படுதலாகாது.

*குறித்தசில வழக்குகள் முதலியவற்றைக் கோப்பிடுவதற்கென விதித்துரைக்கப் பட்ட காலத்தைக் கணிப்பதிலிருந்து குறித்தசில காலப் பகுதியைப் புறநீக்கம் செய்தல்.*

**29.** விதித்துரைக்கப்பட்ட எந்தக் காலப்பகுதிக்குள் ஏதேனும் வழக்கு, மேன்முறையீடு அல்லது விண்ணப்பம் தொடரப்பட வேண்டுமென அல்லது கோப்பிடவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது ஏதேனும் செயல் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் செய்யப்படவேண்டும் என ஏதேனும் எழுத்திலான சட்டத்தால் தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியை அல்லது ஏதேனும் செயல் விதித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்குள் செய்யப்படவேண்டுமென ஏதேனும் எழுத்திலான சட்டத்தால் தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியை அல்லது ஏதேனும் செயல் விதித்துரைக்கப் பட்டவொரு காலப்பகுதிக்குள் செய்யப்படவேண்டுமென ஏதேனும் எழுத்திலான சட்டத்தால் தேவைப்படுத்தப்படுமிடத்து அந்தக் காலப்பகுதியைக் கணிப்பிடுகையில் அத்தகைய வழக்கை விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் தொடருமாறு அல்லது கோப்பிடுமாறு அல்லது குறிப்பிடப்பட்ட செயலைச் செய்யுமாறு தேவைப்படுத்தப்பட்ட ஆள் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆளொருவராக இருப்பாராயின், அத்துடன் அத்தகைய ஆள் சுனாமியின் விளைவாக அத்தகைய நடவடிக்கையை எடுக்க இயலாதவராயிருந்தாராயின் 2004, திசெம்பர் 26 ஆம் தேதி தொடங்கி 2005, திசெம்பர் 26 தேதியன்று முடிவடையும் காலப்பகுதி புறநீக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

## ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கைமுறைச் சட்டத்தின் 66 ஆம் பிரிவின் கீழான வழக்குகள்

*சுனாமியால் பாதிக்கப்பட்ட காணியை உடைமை கொள்ளுதல்.*

**30.** (1) சுனாமியால் பாதிக்கப்பட்ட இடப்பரப்பினுள் அமைந்துள்ள காணியொன்று தொடர்பிலான தகவல் 2004, திசெம்பர் 26 ஆம் திகதி தொடக்கம் 2005, திசெம்பர் 26 ஆம் தேதி வரையிலான காலப்பகுதிக்குள் ஏதேனும் நேரத்தில் 1979 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கைமுறைச் சட்டத்தின் 66 ஆம் பிரிவின்கீழ் கோப்பிடப்படுமிடத்தும் அத்துடன் காணியை உடைமைகொள்வதற்கு உரித்துடையவரைத் தீர்மானிப்பதற்கு அத்தகைய நீதிமன்றத்தால் விசாரணையொன்று நடத்தப்படுமிடத்தும், அத்தகைய சட்டத்தின் 68 ஆம் பிரிவில் முரணாக எது எவ்வாறிருப்பினும் 2004, திசெம்பர் 26 ஆம் தேதியன்று அத்தகைய காணியை உடைமைகொண்டிருந்த ஆள், அல்லது அத்தகைய ஆள் இறந்திருக்குமிடத்து

அல்லது காணாமற்போயிருக்குமிடத்து அந்த ஆளுடன் காணியை ஆட்சியுடைமை கொண்டிருந்த ஆள் அல்லது ஆட்கள் அத்தகைய காணியை உடைமைகொண்டிருந்த ஆளாக அல்லது ஆட்களாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் அவ்வாள் அல்லது ஆட்கள் காணியை உடைமைகொள்வதற்கு உரித்துடைய ஆளாவார் அல்லது ஆட்களாவார் என வெளிப்படுத்திக் கட்டளை ஆக்குதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் காணியை உடைமைகொண்டிருந்த ஆள் அல்லது ஆட்கள் அவ் வுட்பிரிவின்கீழ் அத்தகைய காணியை உடைமைகொண்டிருந்த ஆளினால் அல்லது ஆட்களினால் 2004, திசெம்பர் 26 ஆம் தேதிக்கு முந்திய இரண்டு மாதங்களுக்குட்பட்ட ஏதேனும் நேரத்தில் அத்தகைய காணியில் பலவந்தமாக உடைமையகற்றப்பட்டிருந்தவிடத்து நீதிவான் அவ்வாறு உடைமையகற்றப்பட்ட ஆள் அல்லது ஆட்கள் மீண்டும் உடைமையிலிருத்தப்பட வேண்டுமெனப் பணித்தல் வேண்டும் என்பதுடன், தகுதிவாய்ந்த நீதிமன்றக் கட்டளையின் அல்லது தீர்வையின் அதிகாரத்தின் கீழன்றி வேறுவகையில் அத்தகைய உடைமைகொள்ளலில் ஏதேனும் இடையூறு செய்வதைத் தடைசெய்தலும் வேண்டும்.

## பாகம் V

### வளவுகளின் வாடகைக் குடியிருப்பாளர்கள்

*வாடகைக் குடியிருப்பாளர்களின் அல்லது குத்தகை பெறுநர்களின் உரிமைகள் முடிவுறுத்தப் படுதலாகாது.*

**31.** எவரேனும் ஆள் 2004, திசெம்பர் 26 ஆம் தேதியன்று சுனாமியால் பாதிக்கப்பட்ட எவையேனும் வளவுகளின் அல்லது ஏதேனும் காணியின் வாடகைக் குடியிருப்பாளரொருவராக அல்லது குத்தகைபெறுநராக இருந்தவிடத்து, வாடகைக் குடியிருப்பு அல்லது குத்தகையின் விடயப்பொருள் சுனாமியின் விளைவொன்றாக அழிக்கப்பட்டது என்ற அல்லது இருப்பாட்சிக்கு அல்லது உடைமைகொள்ளலுக்குப் பொருத்தமற்றதாக்கப் பட்டது என்ற நிகழ்வின் காரணமாக மாத்திரம் அவரது வாடகைக் குடியிருப்பு அல்லது குத்தகை உரிமை முடிவுறுத்தப்பட்டதாயிருத்தலாகாது.

## பாகம் VI

### சுனாமி நிவாரண ஆதனம் தொடர்பிலான தவறுகள்

*சுனாமி நிவாரண ஆதனம் தொடர்பில் புரியப்பட்ட தண்டனைச் சட்டக் கோவையின் கீழான குறித்தசில தவறுகள்.*

**32.** சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்கும் நோக்கத்திற்கென முன்னப்பட்ட பணம் உட்பட ஏதேனும் ஆதனம் தொடர்பில் குற்றவியல் கையாடல், குற்றவியல் நம்பிக்கைத் துரோகம், களவு, பணம் பறித்தல், கொள்ளை, ஏமாற்றுதல் அல்லது திருட்டு ஆதனத்தை வைத்திருத்தல் ஆகிய தவறைப் புரிந்தமைக்கு ஆளெவரும் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து, அத்தகைய ஆள் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் தண்டனைச் சட்டக்கோவையின்கீழ் அத் தவறுக்கு விதிக்கப்படும் தண்டனையின் இரண்டு மடங்கிற்குச் சமமான தண்டனை விதிக்கப்படுவதற்கு ஆளாதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**33.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

### முதலாம் அட்டவணை

(பிரிவு 2)

### சுனாமியினால் பாதிக்கப்பட்ட இடப்பரப்புகள்

பின்வரும் பிரதேச செயலாளர் பிரிவுகள் –

1. கொழும்பு நிர்வாக மாவட்டத்தில் கொழும்பு, திம்பிரிகஸ்யாய, தெஹிவளை, மொறட்டுவை மற்றும் இரத்மலானை.

2. கம்பஹா நிர்வாக மாவட்டத்தில் நீர்கொழும்பு, வத்தளை.

3. களுத்துறை நிர்வாக மாவட்டத்தில் பாணந்துறை, களுத்துறை மற்றும் பேருவளை.

4. காலி நிர்வாக மாவட்டத்தில் பெந்தோட்டை, பலப்பிட்டி, அம்பலாங்கொடை, ஹிக்கடுவை, காலி நான்கு சுற்றுப் பிரிவுகள் மற்றும் ஹபராதுவ.

5. மாத்தறை நிர்வாக மாவட்டத்தில் வெலிகாமம், மாத்தறை நான்கு சுற்றுப் பிரிவுகள், தெவிநுவர மற்றும் திக்குவலை.

6. ஹம்பந்தோட்டை நிர்வாக மாவட்டத்தில் திஸ்ஸமஹாராம, ஹம்பந்தோட்டை, அம்பலாந்தோட்டை மற்றும் தங்காலை.

7. யாழ்ப்பாணம் நிர்வாக மாவட்டத்தில் தீவுப்பகுதி வடக்கு (ஊர்காவற்றுறை), கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, காரைநகர், மருதங்கேணி, தெல்லிப்பளை மற்றும் நெடுந்தீவு.

8. முல்லைத்தீவு நிர்வாக மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு மற்றும் மருதம்பற்று.

9. கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தில் கட்டைவேலி மற்றும் பூநகரி.

10. மட்டக்களப்பு நிர்வாக மாவட்டத்தில் கோறளைப்பற்று மத்தி, செங்கலடி, வாழைச்சேனை, களுவாஞ்சிக்குடி, ஏறாவூர் நகர், மண்முனை வடக்கு, வாகரை, காத்தான்குடி, ஆரையம்பதி, கிரான், வெள்ளாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு மற்றும் ஓட்டமாவடி.

11. அம்பாறை நிர்வாக மாவட்டத்தில் கல்முனை, சாய்ந்தமருது, கேரைத்தீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில் மற்றும் லஹூகல.

12. திருகோணமலை நிர்வாக மாவட்டத்தில் குச்சவெளி, திருகோணமலை நகர் மற்றும் சுற்றுப் பிரிவுகள், தம்பலகாமம், கிண்ணியா, மூதூர், சேருவில அத்துடன் வெருகல் ஈச்சிலம்பத்தை.

13. புத்தளம் நிர்வாக மாவட்டத்தில் வென்னப்புவ.

## *இரண்டாம் அட்டவணை*

[(பிரிவு 3) (2)]

...................................................கிராம அலுவலருக்கு,

### காணாமற்போன ஆளொருவரின் இறப்புச் சான்றிதழொன்றின் வழங்குகைக்கான விண்ணப்பம்

1. காணாமற்போன ஆளின் முழுப்பெயர் :

2. பால் :

3. இனம் :

4. வயது :

5. இறந்த திகதி :

6. தெரிந்த கடைசி முகவரி :

7. நிரந்தர வதிவிட முகவரி :

8. பதவி அல்லது தொழில் :

9. விண்ணப்பகாரரின் முழுப்பெயர் :

10. விண்ணப்பகாரரின் வதிவிடமும் தொலைபேசி இலக்கமும் :

11. விண்ணப்பகாரரின் தொழில்/வாழ்க்கைத் தொழில் :

12. விண்ணப்பகாரரின் தொழிலிடமும் தொலைபேசி இலக்கமும் :

13 காணாமற்போன ஆளுக்கும் விண்ணப்பகாரருக்குமுள்ள உறவு :

............................................ என்னும் முகவரியைச் சேர்ந்த ஆகிய நான், சொல்லப்பட்ட (காணாமற்போன ஆளின்பெயர்) ஆறு மாதங்களுக்கு மேலாக காணப்படாதுள்ளார் எனவும் சொல்லப்பட்ட .......................................... என்பவர் இறந்துவிட்டார் எனவும் ............................................ சுனாமியினாலேயே இறப்பு நிகழ்ந்தது எனவும் நிச்சயமாக நம்புகிறேன் எனவும் இத்தால் நான் கூறுகிறேன்.

ஆகவே, இறப்பானது (110 ஆம் அத்தியாயமான) பிறப்புக்கள், இறப்புக்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படவேண்டுமெனவும் அத்தகைய ஆள் தொடர்பிலான இறப்புச் சான்றிதழொன்று எனக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் நான் வேண்டுகிறேன்.

................................................
விண்ணப்பகாரரின் கையொப்பம்

தேதி :.......................................

## மூன்றாம் அட்டவணை

(பிரிவு 9 (1))

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளருக்கு,

### பிள்ளையொன்றின் நடப்புக் கட்டுக்காப்பாளராகப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்

விண்ணப்பகாரரின் விவரங்கள் –

1. பெயர் :
2. முகவரி :
3. பிறந்த திகதி :

4. பால் :
5. அடையாள அட்டை இல. :
6. மதம் :
7. விவாக அந்தஸ்து :
8. விவாகமானவராயின் வாழ்க்கைத்துணையின் பெயர் :
9. தொழில்/வாழ்க்கைத் தொழில் :
10. விண்ணப்பகாரருக்கும் பிள்ளைக்குமுள்ள உறவுமுறை ஏதுமிருப்பின் :
11. பிள்ளையை விண்ணப்பகாரரின் கட்டுக்காப்பிற்கு எடுத்த திகதி :
12. விண்ணப்பகாரர் பிள்ளையை எங்கே, எப்படி கண்டெடுத்தார் :
13. பெற்றோர்/பெற்றோர் உயிருடனிருக்கின்றார்களா என்று உங்களுக்குத் தெரியுமா ?
14. பிள்ளையின் பெற்றோரை/பெற்றோர்களைக் கண்டுபிடிப்பதற்கு நீங்கள் முயற்சி எதனையும் மேற்கொண்டீர்களா ?
15. விவாகமாயிருப்பின் நிகழ்கால கட்டுக்காப்பாளராக பிள்ளையை வைத்திருப்பதற்கு உங்கள் வாழ்க்கைத்துணை உடன்படுகின்றாரா ? அப்படியாயின் தயவுசெய்து சம்மதக் கடிதம் கொடுத்துதவவும் :

பிள்ளையின் விவரங்கள் :—

1. பெயர் :
2. பால் :
3. பிறந்த தேதி, தெரியுமாயின் :
4. முகவரி தெரியுமாயின் :
5. பெற்றோரின் பெயர் தெரியுமாயின் :
6. பிள்ளையின் பெற்றோர்/பெற்றோர் உயிர்பிழைத்துள்ளனரா என்று உங்களுக்குத் தெரியுமா ?

எனது அறிவுக்கெட்டியவரை மேற்படி விவரங்கள் உண்மையானவை என இத்தால் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

.............................................
விண்ணப்பகாரரின் கையொப்பம்

......................
தேதி

## *நாலாம் அட்டவணை*

(பிரிவு 13(1))

**சுவீகாரக் கவனிப்புக் கட்டளையொன்றின் வழங்குகைக்கான விண்ணப்பம்**

............................................... நீதிவான் நீதிமன்றத்திற்கு,
........................... என்னும் முகவரியில் வதியும் கீழே கையொப்பமிட்டுள்ள நான்/நாம் இத்தால் கூறுவதாவது :–

1. 2005 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 16 ஆம் பிரிவின்கீழ் பிள்ளையொன்றின்/இளம் ஆள் ஒருவரின் சுவீகாரப் பெற்றோராக/பெற்றோர்களாக/நியமிக்கப்பட விரும்புகின்றேன்/விரும்புகின்றோம்.

2. சுவீகாரப் பெற்றோர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் நான் வேறு விண்ணப்பம் எதனையும் செய்யவில்லை/ அத்துடன்/அல்லது

   சுவீகாரப் பெற்றோர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் நான் விண்ணப்பமொன்றைச் செய்துள்ளேன் என்பதுடன் அத்தகைய விண்ணப்பம் .......................... நீதிவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் முடிவுறாதிருக்கின்றது.

   அத்துடன்/அல்லது

   நான் ...................... நீதிவான் நீதிமன்றத்தால் .................. ஆம் தேதியன்று ஆக்கப்பட்ட சுவீகாரப் பராமரிப்புக் கட்டளையால் .....................யின் (பிள்ளையின் /இளம் ஆளின் பெயர்) சுவீகாரப் பெற்றோர் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளேன்.

   அத்துடன்/அல்லது

   மேற்படிச் சட்டத்தின்கீழ் ........................ மாவட்ட நீதிமன்றத்தால்/ நீதிமன்றத்தின் முன்னிலையில் மகவேற்புக் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளது/முடிவுறாதுள்ளது.

3. எனக்கு/எமக்கு பிள்ளையொன்றின்/இளம் ஆளின் சுவீகாரப் பராமரிப்பு அளிக்கப்பட்டால்/நான்/நாம் இத்தால் பின்வருவனவற்றிற்கு உடன்படுகின்றேன் /உடன்படுகின்றோம்.

   (அ) பிள்ளை/இளம் ஆள் தொடர்பில் நானே /நாமே அதன்/ அவரின் பெற்றோர்/பெற்றோர்/என்றாற்போன்று கல்வியை ஏற்பாடு செய்தல் உட்பட கவனிப்பும் பாதுகாப்பும் வழங்குவதற்கும் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கும் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் :

   ஆ. கண்காணிப்பு அலுவலர் இச்சட்டத்தின்கீழ் அவரது கடமைகளை நிறைவேற்றும் நோக்கங்களுக்கு எமது இல்லத்திற்கு அல்லது பிள்ளை/இளம் ஆள் வதியும் வேறு இடத்திற்கும் வருகைதருவதற்கு கண்காணிப்பு அலுவலரை அனுமதிப்பதற்கு :

இ. உளரீதியில் அதிர்ச்சிக்குட்பட்டுள்ள ஒரு பிள்ளையை/இளம் ஆளைக் கவனித்தல் பற்றி ஏற்பாடு செய்யப்படக்கூடிய வாறான அத்தகைய பயிற்சியை மேற்கொள்வதற்கு :

ஈ. சுவீகார கவனிப்புக் கட்டளை இல்லாதொழிக்கப்படும் பட்சத்தில் பிள்ளையை/இளம் ஆளை கண்காணிப்பு அலுவலர் ஒருவரிடம் ஒப்படைப்பதற்கு.

இதற்கத்தாட்சியாக 2005 ................ மாதம் ...........ஆந் தேதியன்று, நான் இவ்விண்ணப்பத்தில் கையொப்பம் வைத்துள்ளேன்.

| | |
|---|---|
| ............................................... | ............................................... |
| விண்ணப்பகாரரின் பெயர் | விண்ணப்பகாரரின் கையொப்பம் |
| ............................................... | ............................................... |
| வாழ்க்கைத் துணையின் பெயர் | வாழ்க்கைத் துணையின் கையொப்பம் |
| .................................. | ............................................... |
| தேதி. | தேதி. |

## ஐந்தாம் அட்டவணை

(பிரிவு 13 (1))

### 13 ஆம் பிரிவின் கீழான தகவல்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு

பின்வரும் தகவல் சுவீகாரப் பெற்றோர் ஒருவராக இருப்பதற்கான விண்ணப்பகாரரின் தகுதியை மதிப்பீடு செய்யும் நோக்கத்திற்கென 2005 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி இத்தால் கொடுத்துதவப்படுன்றது.

விண்ணப்பகாரர் பற்றிய தகவல் :

1. பெயர் : திரு /திருமதி/செல்வி
2. முகவரி :
3. பிறந்த திகதி : [ | | ] தே. மா. ஆண்டு
4. விண்ணப்பிக்கும் தேதியன்றுள்ளவாறு வயது : [ ]

5. பால் :ஆ/பெ

6. மதம்

7. தே. அ. அ. இல. :

8. விவாக அந்தஸ்து :
விவாகமானவர்/ தனியாள்/
விவாகரத்தானவர் :

9. (அ) தற்போதைய தொழிலும் மாதச் சம்பளமும் :

(ஆ) இத்தொழிலில் நீங்கள் எவ்வளவு காலமாக இருக்கின்றீர்கள் ?

(இ) முன்னைய தொழில், ஏதேனும் இருப்பின் ;

வாழ்க்கைத் துணை பற்றிய தகவல் :

10. வாழ்க்கைத் துணையின் பெயர் :

11. விவாகமான தேதி :

| | | |
|---|---|---|
| | | |
| நா. | மா. | ஆ. |

12. வாழ்க்கைத் துணையின் பிறந்த திகதி :

| | | |
|---|---|---|
| | | |
| நா. | மா. | ஆ. |

13. தற்போதைய தொழிலும் மாதச் சம்பளமும் :

14. பிள்ளைகளின் பெயர்கள், எவருமிருப்பின் அத்துடன் அவர்களது வயது :

தற்போதைய கட்டுக்காப்பாளரைப் பதிவு செய்தல் :

15. இவ்விண்ணப்பம் செய்யப்படுவதற்கு உங்கள் வாழ்க்கைத்துணை சம்மதிக்கின்றாரா?

ஆம் /இல்லை

தயவு செய்து சம்மதக் கடிதத்தை இணைக்கவும்.

16. சுனாமியால் பாதிக்கப்பட்ட பிள்ளையொன்றை நீங்கள் தற்பொழுது கட்டுக்காப்பில் வைத்திருக்கின்றீர்களா?

ஆம் /இல்லை

17. "ஆம்" எனில் நீங்கள் தற்போதைய கட்டுக்காப்பாளராக உங்களைப் பதிவு செய்துள்ளீர்களா?

ஆம் /இல்லை

18. "ஆம்" எனில் பதிவுத் தேதியும் மாகாணமும் பதிவிலக்கமும் :

19. நீங்கள் இப்போது கட்டுக்காப்பாளர் ஒருவராயின் உங்கள் கட்டுக் காப்பிலுள்ள பிள்ளையின் சுவீகாரப் பெற்றோராக இருப்பதற்கு விண்ணப்பிக்க விரும்புகின்றீர்களா?

ஆம் /இல்லை

பிள்ளை /இளம் /ஆள் பற்றிய தகவல் :

20. நீங்கள் சுவீகாரம் செய்ய விரும்பும் பிள்ளையை/இளம் ஆளை இனம் கண்டுள்ளீர்களா?

ஆம் /இல்லை

21. (அ) "ஆம்" எனில்,

அ. பிள்ளையின்/இளம் ஆளின் பெயர்

ஆ. தற்போதைய முகவரி :

இ. வயது தெரியுமாயின் :

ஈ. பால் :

உ. உங்களுக்குத் தெரிந்தவரை பிள்ளைக்கு/ இளம் ஆளுக்கு உடன் பிறப்புகள் உண்டா?

ஊ. 'ஆம்' எனில் நீங்கள் சுவீகாரப் பெற்றோர் என்ற வகையில் உடன்பிறப்புக்களையும் உங்கள் பராமரிப்பின்கீழ் எடுக்க விரும்புகின்றீர்களா?

எ. உங்கள் அறிவுக்கெட்டியவரை பிள்ளையின்/இளம் ஆளின் பெற்றோர் ஒருவர் உயிருடனிருக்கின்றாரா?

ஏ. 'ஆம்' எனில் அத்தகைய பெற்றோரின் முகவரியைக் குறிப்பிடவும்.

ஐ. பெற்றோர் இவ்விண்ணப்பதிற்கு உடன்படுகின்றாரா?

ஒ. பிள்ளையை/ இளம் ஆளை எவ்வளவு காலமாக உங்களுக்குத் தெரியும்.

ஓ. பிள்ளை /இளம் ஆள் உங்களுக்கு எப்படித் தெரிய வந்தது?

ஔ. பிள்ளைக்கு /இளம் ஆளுக்கு நீங்கள் உறவினரா?

க. சுனாமி ஏற்படுவதற்கு முன்னரே பிள்ளையை/இளம் ஆளை உங்களுக்குத் தெரியுமா?

ங. சுனாமி ஏற்படுவதற்கு முன்னரே பிள்ளையின்/இளம் ஆளின் பெற்றோரை உங்களுக்குத் தெரியுமா?

ச. பிள்ளையின் பெற்றோர்/ பெற்றோர் உயிருடன் இருக்கின்றார்களா என்று உங்களுக்குத் தெரியுமா?

ஞ. 'ஆம்' எனில் தயவுசெய்து அவர்களின் அறியப்பட்ட வதிவிடத்தைக் குறிப்பிடவும்.

(ஆ) 'இல்லை' எனில் –

(அ) நீங்கள் சுவீகாரம் பெற விரும்புவது ஒரு பிள்ளையையா அல்லது ஓர் இளம் ஆளையா ?

(ஆ) விருப்பத்திற்குரிய வயது என்ன ?

(இ) விருப்பத்திற்குரிய பால் நிலை என்ன ?

ஆண் / பெண்

22. நீங்கள் இளம் ஆள் ஒருவரை சுவீகாரம் பெற விரும்பினால் சுவீகாரப் பராமரிப்புக் கட்டளை எவ்வளவு காலம் நடைமுறையிலிருக்க வேண்டும் என விரும்புகின்றீர்களா ?

ஓராண்டு இளம் ஆள் .................... வயதை அடையும் வரை.

23. அடுத்துவரும் ஓராண்டிற்குள் உங்களுக்கோ உங்கள் வாழ்க்கைத் துணைக்கோ தொழிலின்பொருட்டு வெளிநாடு செல்லும் உத்தேசம் உண்டா?

ஆம் / இல்லை

24. நீதிமன்றமொன்றில் நீங்கள் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா?

ஆம் / இல்லை

'ஆம்' எனில், தவறையும் பெறப்பட்ட தண்டனையையும் குறிப்பிடவும்.

25. நீதிமன்றமொன்றின் முன்னர் நீங்கள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளீர்களா ?

ஆம் / இல்லை

26. பிணக்கொன்றைத் தீர்ப்பதற்கு நீங்கள் மத்தியஸ்த சபையின் முன்னிலைக்குச் சென்றுள்ளீர்களா?

'ஆம்' / இல்லை

'ஆம்' எனில் பிணக்கின் தன்மையைக் குறிப்பிடவும்.

.......................................................

விண்ணப்பகாரரின் ஒப்பம்

## *ஆறாம் அட்டவணை*

(பிரிவு 14 (5) )

### சுவீகாரப் பெற்றோர் ஒருவராக இருப்பதற்கு விண்ணப்பகாரர் ஒருவரின் தகுதியை மதிப்பீடு செய்வதற்கான மூலப் பிரமாணம்

1. சாத்தியப்படக்கூடியவரை பிள்ளை –

(அ) பிள்ளைக்குத் தெரியாத ஆட்களைவிட விரும்பத்தக்கவாறு கூட்டுக் குடும்பத்துடன் அல்லது தெரிந்த ஆட்களுடன் ;

(ஆ) பிள்ளைக்குப் பழக்கமான சுற்றாடலில் அல்லது சமுதாயத்தில் குறைந்தபட்ச புலம்பெயர்வுடன் ;

(இ) பிள்ளையின் மரபுரிமைகளுக்கேற்ப அதே இன அத்துடன் மதக்குழுவைச் சேர்ந்த சுவீகாரப் பெற்றோருடன் ;

(ஈ) பிள்ளையைப் போன்று அதே பண்பாடு மற்றும் மொழி சார்ந்த பின்னணியைக் கொண்ட சுவீகாரப் பெற்றோருடன் ;

(உ) உடன் பிறப்புக்களுடன்,

இருத்தல் வேண்டும்.

2. ஒரு தம்பதி விரும்பத்தக்கது. ஆயினும் இதன்கண் தரப்பட்டுள்ள எல்லா மூலப் பிரமாணங்களும் முறையாக கருத்திற்கொள்ளப்பட்ட பின்னர் பிள்ளைக்கு அதிக நன்மை பயக்குமாயின் தனிப் பெற்றோர் கருத்திற் கொள்ளப்படலாம்.

3. சுவீகாரப் பெற்றோருக்கும் பிள்ளைக்கும் இடையிலான வயது வித்தியாசம் 25 முதல் 45 ஆண்டுகளுக்கு இடைப்பட்டதாக விருத்தல் வேண்டும்.

4. தம்பதியர் 3 ஆண்டுகளுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு சட்டப்படி விவாகமானவர்களாயிருத்தல் வேண்டும்.

5. பின்வரும் ஆட்கள் சுவீகாரப் பெற்றோராக கருத்திற்கொள்ளப் படுதலாகாது :–

(அ) பிள்ளையின் தகுந்த விருத்திக்குத் தடங்கலாயிருக்கும் மதுபோதைப் பழக்கம், போதைப் பதார்த்தங்களின் துஷ்பிரயோகம், உடல், உள மற்றும் உணர்வு சார்ந்த குறைபாடு பற்றிய வரலாறு கொண்ட ஆட்கள்,

(ஆ) துன்புறுத்தப்பட்ட வரலாறுகொண்ட அல்லது பிள்ளைப் பருவத்தின் போது சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் வழங்கப்பெற்ற ஆட்கள்,

(இ) ஏதேனும் தவறுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட அல்லது பொலிசுப் பதிவொன்றையுடைய ஆட்கள்,

(ஈ) நீண்டகாலப் பகுதியொன்றுக்கு தொழிலுக்காக அல்லது வேறு காரணத்திற்காக வெளிநாடு செல்லத் திட்டமிடும் ஆட்கள்.

6. சுவீகாரக் குடும்பமானது விண்ணப்பகாரர் பெற்றோர், பெற்றோர் சார்ந்த பயனுறுதியுள்ள ஆற்றல்களும் விவாகப்பந்தமும் வெளிப் படுத்தப்படுவதும் குடும்ப வன்முறையற்றதுமான நிலையான வொரு குடும்பமாக இருத்தல் வேண்டும்.

7. அண்மையில் பிள்ளையொன்றின் இறப்பு நிகழ்ந்த குடும்ப மொன்றில் இடமளித்தலானது இதன்கண் தரப்பட்டுள்ள வேறு மூலப் பிரமாணங்கள் எல்லாவற்றையும் முறையாக கருத்திற் கொண்டதன் பின்னர் பிள்ளைக்கு அதிகளவு நன்மை பயப்பதாக இருந்தாலன்றி அத்தகைய குடும்பமொன்று கருத்திற்கொள்ளப் படுதலாகாது.

8. சுவீகாரப் பெற்றோர் –

(அ) உளரீதியான அதிர்ச்சிக்குட்பட்ட ஒரு பிள்ளையை அல்லது இளம் ஆளைக் கவனிப்பதில் பயிற்சியை மேற்கொள்ள விரும்புகின்றவர்களாகவும் ;

(ஆ) சுகாதார வசதிகளை வழங்குவதிலும் பாதுகாப்பு சார்ந்த பொறுப்புக்களிலும் பயிற்சியை மேற்கொள்ள விரும்புகின்ற வர்களாகவும் அதற்கான ஆற்றலுடையவர்களாகவும் ;

(இ) மதிப்பீட்டு மற்றும் கண்காணிப்பு நடைமுறையின் ஒரு பகுதி யாக நேரில் சந்திக்கப்படுவதற்கும் பார்வையிடப்படுவதற் கும் உடன்படுபவர்களாகவும் ;

இருத்தல் வேண்டும்.

9. இல்லம் –

(அ) அதன்கண் வதியும் எல்லா குடும்ப உறுப்பினர்களுக்கும் போதியளவு இடவசதியைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஆ) பிள்ளையின் வயதுடன் ஒப்புநோக்கப்படற்பாலதாக சுத்தம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக சிறந்த தராதரம் பேணப்படுதல் வேண்டும்.

10. சுவீகாரப் பெற்றோர் பின்வருவனவற்றை ஏற்பாடு செய்யக் கூடிய வர்களாயிருத்தல் வேண்டும் :–

(அ) போதிய முதனிலை மற்றும் தடுப்புச் சுகாதாரக் கவனிப்பு.

(ஆ) பிள்ளையின் அல்லது இளம் ஆளின் உடல், உள, உணர்வு நிலை மற்றும் சமூக அபிவிருத்தியை நிறைவு செய்யும் சுகாதாரக் கவனிப்புத் தேவைகள்.

(இ) பிள்ளையின் அல்லது இளம் ஆளின் முழு வளர்ச்சிக்கான வாய்ப்பை எய்துவதற்கு அவசியமான ஊட்டச்சத்து.

11. சுவீகாரப் பெற்றோர் பிள்ளைக்குப் போதியளவு கல்வியறிவூட்டப் படுவதை உறுதி செய்யக் கூடியவர்களாயிருத்தல் வேண்டும்.

12. கூட்டுக்குடும்பத்துடனும் நண்பர்களுடனுமான தொடர்பு நியாயமானளவு சாத்தியமற்றதாகவும் பிள்ளையின் நலனுக்கு ஒவ்வாததாகவும் இருந்தாலன்றி சுவீகாரப் பெற்றோர் அத்தகைய தொடர்புகளைப் பேணுவதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமான வாய்ப்புக்களை பிள்ளைக்கு அல்லது இளம் ஆளுக்கு வழங்க விருப்பமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

13. பிள்ளையின் விருப்பங்களுள் போதியளவு கருத்திற் கொள்ளப் படுதல் வேண்டும்.

14. சுவீகார கவனிப்புக் காலப்பகுதியின் பின்னர் பிள்ளையை மகவேற்பு செய்வதற்கான விண்ணப்பகாரரின் ஆர்வம் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

குழாம் மேற்படி வழிகாட்டிகளைப் பிரயோகிக்கையில் அதற்கென அவசிய மானவையெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய விசாரணைகளையும் புலனாய்வுகளையும் செய்யலாம்.

## *ஏழாம் அட்டவணை*

(பிரிவு 15 (2))

### எந்த ஆட்களிடையேயிருந்து கண்காணிப்பு அலுவலர் ஒருவர் தெரிவு செய்யப்படவேண்டுமோ அந்த ஆட்களின் பதவிப் பெயர்கள்

* நன்னடத்தை அலுவலர்கள்

* சிறுவர் உரிமைகள் ஊக்குவித்தல் அலுவலர்கள்

* பாடசாலை அதிபர்கள்

* தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்கள்.

### எட்டாம் அட்டவணை

(பிரிவு 16 (1))

.................................................................. நீதிவான் நீதிமன்றத்தில்
வழக்கு இல.........................................................................................

### சுவீகார கவனிப்புக் கட்டளையும் நிபந்தனைகளும்

(சுவீகாரப் பெற்றோரின்/பெற்றோர்களின் பெயர்)

(முகவரி)

1. தாங்கள் ..................................... (பிள்ளையின் / இளம் ஆளின்) என்பவரின் சுவீகாரம் பெற்றோராக/பெற்றோர்களாக *இக்கட்டளையின் தேதியிலிருந்து .................................... (இளம் ஆளின் பெயர்) ...................................................... வயதையடையும் தேதியாகிய .............................................................. வரையிலான ஓராண்டு காலப்பகுதியொன்றுக்கு இத்தால் நியமிக்கப்படுகின்றீர்கள்

அல்லது

..................................... (பிள்ளையின்/இளம் ஆளின் பெயர்) என்பவரின் சுவீகாரப் பெற்றோராக /பெற்றோர்களாக ஓராண்டு காலப்பகுதிக்குத் தங்களை நியமித்து .................................... ஆம் தேதியன்று ஆக்கப்பட்ட சுவீகாரக் கவனிப்புக் கட்டளை .................... ............... ஆம் தேதியிருந்து மேலும் ஓராண்டு காலப்பகுதிக்கு இத்தால் புதுப்பிக்கப்படுகின்றது.

2. இந்நியமனம் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவானதாகும் :

(அ) சுவீகாரப் பிள்ளைக்கு/இளம் ஆளுக்குத் தாங்கள் கல்வி வசதி அளித்தலும் பிள்ளை/இளம் ஆள் அனுபவித்த உள அதிர்ச்சி காரணமாக அதற்குத் தேவைப்படும் ஏதேனும் விசேட கவனிப்பும் உட்பட தாங்கள் அத்தகைய பிள்ளையின்/இளம் ஆளின் இயற்கைப் பெற்றோர் என்றாற்போன்று அத்தகைய கவனிப்பையும் பாதுகாப்பையும் வழங்குதலும் அத்தகைய எல்லாக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் அத்தகைய எல்லா கடப்பாடுகளையும் நிறைவேற்றுதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தங்களால் வழங்கப்படும் சுவீகாரக் கவனிப்பு பற்றி அறிக்கையிடுவதற்கு இதன்கீழ் பெயர் குறிப்பிடப்பட்ட கண்காணிப்பு அலுவலரை இயலச் செய்வதற்குத் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய எல்லா உதவியையும் ஒத்துழைப்பையும் வழங்குதல் வேண்டும் என்பதுடன் இந்நோக்கத்திற்காக சுவீகாரப் பிள்ளை /இளம் ஆள் வதியும் வளவுகளில் ஏதேனும் நேரத்தில் உட்பிரவேசிப்பதற்கும் அதற்கென அவசியப்படக் கூடியவாறான எவரேனும் ஆளை விசாரிக்கவும் அல்லது ஏதேனும் இடத்தை சோதனையிடுவதற்கும் அவருக்கு அனுமதியளித்தலும் வேண்டும்.

3. மேற்படி நிபந்தனைகள் எவற்றையும் தாங்கள் மீறும் பட்சத்தில் சுவீ காரக் கவனிப்புக் கட்டளை இல்லாதொழிக்கப்படுவதற்கு ஆளாகும்.

4. (அ) இக்கட்டளை இல்லாதொழிக்கப்படின்,

(ஆ) இக்கட்டளை முடிவுறுவதன்மேல்,

(இ) இக்கட்டளை அற்றுப்போவதன்மேல்,

பிள்ளையின்/இளம் ஆளின் கட்டுக்கோப்பை தேசிய சிறுவர் பாது காப்பு அதிகாரசபையால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவல ரொருவருக்குக் கையளிக்குமாறு தாங்கள் தேவைப்படுத்தப்படு கின்றீர்கள்.

5. ................................... என்பவர் கண்காணிப்பு அலுவலராக இத்தால் பெயர் குறிப்பிடப்படுகின்றார்.

..............................................................
நீதிவானின் கையொப்பமும் இலச்சினையும்

தேதி :................................

## ஒன்பதாம் அட்டவணை

(பிரிவு 18 (1) )

### சுவீகார கவனிப்பு அறிக்கை

மாவட்டம் ................................. .......................... காலப்பகுதிக்கான அறிக்கை.

சுவீகாரக் கவனிப்புக் கட்டளை

கட்டளையின் திகதி :............................ கட்டளை முடிவுறும் தேதி ...........................................

திறத்தவர்களின் பெயர்கள்
சுவீகாரப் பெற்றோரின்/பெற்றோர்களின் பெயர் ......................................

முகவரி : ...............................
..............................
..............................

(1) பின்வருவன மீதான குறிப்புரை.

(அ) பெற்றோரினதும்/பெற்றோர்களினதும் குடும்பத்தினதும் பொருத்தத்தின் குணாதிசயங்கள்.

(ஆ) இல்லச் சுற்றாடலின் குணாதிசயங்கள்,

(இ) சுகாதாரக் கவனிப்பு ,

(ஈ) துஷ்பிரயோகத்திலும் அசட்டை செய்யப்படுவதிலிருந்து பாது காப்பு,

(உ) கல்வி வசதிகள்

(ஊ) தேர்ச்சிகளின் அபிவிருத்தி

(எ) பிள்ளையின் உரிமைகளைப் பாதுகாத்தல்

(ஏ) கூட்டுக்குடும்பத்துடனும் நண்பர்களுடனும் தொடர்பைப் பேணுதல்.

(ஐ) சுவீகாரப் பிள்ளையை / இளம் ஆளைப் பற்றிய விசேட குறிப்புரைகள்/ அவதானிப்புரைகள்.

(2) பிள்ளையின் அதிகளவிலான நலன்கள் நிறைவேற்றப்படுகின்றனவா?

| | |
|---|---|
| ......................................... | ........................................... |
| கண்காணிப்பு அலுவரின் பெயர் | கண்காணிப்பு அலுவலரின் கையொப்பம். |

தேதி : ........................

## பத்தாம் அட்டவணை

(பிரிவு (20 (1))

### சுவீகாரக் கவனிப்புக் கட்டளையை இல்லாதொழித்தல்

................................................ மாகாணம்.

................................................ சுவீகாரப் பெற்றாரின்/ பெற்றோர்களின்

பெயர்

முகவரி

............................................ (சுவீகாரப் பிள்ளையின்/ இளம் ஆளின் பெயர்) என்பவரின் சுவீகாரப் பெற்றோராக /பெற்றோர்களாகத் தங்களை நியமித்து .................................... (கட்டளையின் தேதியைக் குறிப்பிடவும்) அன்று ஆக்கப்பட்ட சுவீகார கவனிப்புக் கட்டளை இத்தால் உடனடியாக இல்லா தொழிக்கப்படுகின்றது.

பிள்ளையின்/ இளம் ஆளின் கட்டுக்காப்பை அதனை /அவரை அப்புறப்படுத் துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட .............................. (அதிகாரமளிக்கப்பட்ட பராமரிப்பு அலுவலர் பெயர்) என்பவரிடம் உடனடியாகக் கையளிக்குமாறு தாங்கள் தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்.

| | |
|---|---|
| தேதி : ........................ | ......................................... |
| | நீதிவானின் கையொப்பமும் இலச்சினையும். |

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்